NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 12 October 2022

# ஓமிக்ரான் தொற்றும் விதம் ஆய்வு

ஓமிக்ரான் வகை கொவிட்–19 கிருமி தொற்றும் விதம் தடுப்பூசி போட்டுக்கொண்டோர் தொற்றுடன் வாழும் உருமாற்றத்திற்கு வழிசெய்து இருப்பதாக டியூக்–என்யுஎஸ் மருத்துவக் கல்வி நிலையமும் தொற்றுநோய்களுக் கான தேசிய நிலையமும் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

"ஓமிக்ரானின் அதிகம் பரவும் தன்மையின் விளைவாக அதிகமான மக்கள் இருதரப்பு நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெற்றுள்ளனர். அந்த ஆற்றல் மறுதொற்று ஏற்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகிறது," என்று தொற்று நோய்களுக்கான தேசிய நிலையத்தின் தொற்றுநோய் ஆராய்ச்சிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் டேவிட் லை தெரிவித்துள்ளார். "அடிப்படைத் தடுப்பூசிகளையும் பூஸ்டர் தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டோரைத் தொற்றும் ஓமிக்ரான் வகைக் கிருமியின் ஆற்றல் மிகவும் இலேசானது. மேலும், அவர்களின் நுரையீரலில் தொற்றை ஏற்படுத்துவதற்கும் அவர்களுக்கு உயிர்வாயு உதவி தேவைப்படுவதற்குமான தேவை ஏற்படாத வகையில் கிருமியின் வலு குறைந்திருக்கும்," என்றும் பேராசிரியர் லை தெரிவித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.